செ.வெ.எண்.58 நாள்.23.11.2017.

திருநெல்வேலி மாவட்டம், பாளையங்கோட்டை மத்திய சிறைச்சாலையில் மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சந்தீப் நந்தூரி,இ.ஆ.ப., அவர்கள் சிறை கைதிகளுக்கு நிலவேம்பு குடிநீர் வழங்கி,டெங்கு விழிப்புணர்வு குறித்து பேசினார்.

-------

திருநெல்வேலி மாவட்டம், பாளையங்கோட்டை மத்திய சிறைச்சாலையில் தமிழ்நாடு அரசு உணவுத் துறை மற்றும் சித்த மருத்துவ நிர்வாக துறை இணைந்து சிறை கைதிகளுக்கு நிலவேம்பு குடிநீர் வழங்குதல் மற்றும் டெங்கு விழிப்புணர்வு நிகழ்ச்சி இன்று (23.11.2017) நடைபெற்றது. இந்நிகழ்ச்சியில் மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சந்தீப் நந்தூரி,இ.ஆ.ப., அவர்கள் கலந்து கொண்டு சிறை கைதிகளுக்கு நிலவேம்பு குடிநீர் வழங்கி, டெங்கு விழிப்புணர்வு ஏற்படுத்தினார். டெங்கு கொசு ஒழிப்பு தொடர்பாக ஜோஸ் (ம) மெக்டலின் மெட்ரிக் பள்ளி மாணவ, மாணவிகள் விழிப்புணர்வு கலை நிகழ்ச்சி நடைபெற்றது.

பின்னர், மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் பேசியதாவது–

திருநெல்வேலி மாவட்டத்தில் மெகா தூய்மை பணிகள் மற்றும் டெங்கு கொசு ஒழிப்பு பணிகள் தீவிரமாக நடைபெற்று வருகிறது. சிறைச்சாலை வளாகத்தில் உள்ள பகுதிகளில் தண்ணீர் தேங்காமல் பார்த்துக் கொள்ள வேண்டும். உபயோகமற்ற பொருட்களை அவ்வப்பொழுது அகற்றிட வேண்டும். சிறைச்சாலை வளாகத்தினை சுத்தமாக வைத்துக் கொள்ள வேண்டும். டீ கப் மற்றும் பிளாஸ்டிக் போன்ற பொருட்களை தவிர்க்க வேண்டும். இதுபோன்ற பொருட்களை உபயோகபடுத்தினால் அதனை குப்பைத் தொட்டிகளில் போட வேண்டும். சிறைச்சாலை வளாகத்தில் நடைபெறும் கட்டுமான இடங்களில் தண்ணீர் தேங்காத வண்ணம் பார்த்துக் கொள்ள வேண்டும். காய்ச்சல் ஏற்பட்டால் சிறைச்சாலையில் உள்ள மருத்துவரை அணுகி, மருத்துவ சிகிச்சை பெற வேண்டும். நீங்கள் அனைவரும் கொசு புழுக்கள் உற்பத்தியாக வண்ணம் தங்களது இருப்பிடத்தினை சுத்தமாக வைத்துக் கொள்ள வேண்டும். இப்படி பராமரித்தால் டெங்கு கொசு உற்பத்தியாவதை முற்றிலுமாக தவிர்க்கலாம் என தெரிவித்தார்.

இந்நிகழ்ச்சியில், சிறைச்சாலை கண்காணிப்பாளர் திரு.செந்தாமரைகண்ணன், உணவு பாதுகாப்பு அலுவலர் மரு.செந்தில்குமார், மாநகர நகர்நல அலுவலர் மரு.பொற்செல்வன், மாவட்ட சித்தா மருத்துவ அலுவலர்கள் மரு.மாபிள் அருள்மணி, மரு.பரமசிவன், வட்டார உணவு பாதுகாப்பு அலுவலர்கள் திரு.சங்கரலிங்கம், திரு.ரமேஷ், ஆர்.சோயா தொண்டு நிறுவன பிரதிநிதி திரு.சரவணன் மற்றும் ஜோஸ் (ம) மெக்டலின் மெட்ரிக் பள்ளி ஆசிரியர்கள் மாணவ, மாணவிகள், சிறை கைதிகள் மற்றும் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

வெளியிடு : செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், திருநெல்வேலி.